ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

घृष्टं घृष्टं पुनरपि पुनश्चन्दनं चारुगन्धं
छिन्नं छिन्नं पुनरपि पुनश्चारुचैवेक्षुकाण्डम् ।
दग्धं दग्धं पुनरपि पुनः काञ्चनं चारुवर्णं
प्राणान्तेन प्रकृतिविकृतिर्जायते सज्जनानाम् ॥

சந்தனத்தை அடிக்கடி அரைத்தாலும், அது எப்படி நல்ல வாஸனையைத் தருகின்றதோ, கரும்புத்தண்டத்தை எவ்வளவு சிறியதாய் வெட்டினாலும் அதெப்படி சுவை குன்றாதோ, தங்கத்தை எத்துணை தடவை அக்கினியிலிட்டுப் புடம்போட்டாலும் அதன் ஒளி எப்படிக்குறையாதோ அவ்விதமே ஸாதுக்களுடைய ஸ்வபாவமானது அவர்கள் ஜீவித்திருக்கும் வரையில் மாறுதலையடையாது.

உலகில் ஜனங்களின் ஸ்வபாவமானது சரியான நிலையிலில்லாமல் அற்பலாபம் கிடைத்ததாகத்தோன்றினால் அளவிறந்த சந்தோஷத்தையும் ஆஸ்திகபுத்தியையும் பெரியோர்களிடம் பக்தியையும், அதிகம் பாராட்டுகிறார்கள். ஏதாகிலும் சொல்ப கஷ்டம் நேரும்போலிருந்தால், அக்காலத்தில் யாதொன்றும் தோன்றாமல் மிகுந்த துக்கத்துடன் சாஸ்திரங்களையும் கடவுளையும் பலவாராய் நொந்துகொண்டு, தர்மநெறிகளில் பற்றுதல் அற்று பித்தனைப்போல் பிதற்றுகிறார்கள். அவ்விதமில்லாமல் எந்த சமயத்திலும் மாறாத உத்தமஸ்வபாவத்துடன் இருக்க வேண்டுமென்று திருஷ்டாந்தமுகமாயறிவிக்கிறார். அதாவது, சந்தனம், கரும்பு, ஸுவர்ணம், பால் முதலியவஸ்துக்களை நாம் அரைத்தும், வெட்டியும், நெருப்பிலிட்டும் ஹிம்ஸித்தாலும் அவைகள் தம் இயற்கையான ஸ்வபாவத்திலிருந்தும் குறைவடையாமல் எப்படி அதிக குணங்களை வெளியிடுகின்றனவோ, அவ்விதம் மஹான்களும் தம் ஆயுளுள்ளவரையில் எவ்விதகஷ்டம் நேர்ந்தாலும் மாறுதலையடையமாட்டார்கள் என்கிறார். இதனால் நாமும் உறுதியான எண்ணத்துடன் மாறாமல் நல்வழிகளில் புத்தியைச் செலுத்தவேண்டுமென்று ஏற்படுகின்றது.

நமது தர்மம்.

1. தர்மம் என்பது என்ன?

அதன்வழி நடப்பவர்களை ஸகல துன்பங்களினின்றும் விலக்கி ஸகலநன்மைகளையும் பயக்கும் மார்க்கமேயாம். இதனை மதம் எனவுங்கூறுவார்கள்.

2. உலகில் தற்காலம் காணப்படும் மதங்களுள் பழமையான மதம் யாது?

நவீனர்களால் "ஹிந்துமதம்" என்று வழங்கப்படும் நமது தர்மமே மிகப்பழமையான மதம்.

3. நமது முன்னோர்கள் இதனை எவ்வாறு வழங்கி வந்தனர்?

அவர்கள் இதனையே ஸநாதனதர்மம் எனவும் வேதமார்க்கம் எனவும் ஆஸ்திகமதம் என்றும் வழங்கினர்.

4. இம்மதம் மிகப் பழமையானதெனில் இதன் ஆரம்பகாலத்தை யொருவாறு நிர்ணயிக்கக்கூடுமோ?

மற்றைய மதங்களைப்போல் இம்மதத்திற்கும் நமது வேதத்திற்கும் ஆரம்பகாலத்தை நிர்ணயித்தல் முடியாத காரியம். இதர மதங்கள் அவற்றை யேற்படுத்தியவர் பெயராலேயே வழங்கப்படுவதால் அதைக்கொண்டு அவை தொடங்கிய காலத்தை நிர்ணயிப்பது ஸாத்தியமாகின்றது. நமது மதம் மனிதரெவராலும் ஏற்படுத்தப்பட்டதல்ல. ஆதலின் எல்லாவற்றிற்கும் ஆரம்பகாலத்தை யூகத்தினால் நிர்ணயிக்கத்துணியும் நவீன

சரித்திர நிபுணர்கள்கூட இம்மதம் தொடங்கிய காலத்தை நிர்ணயிக்க முடியாது திகைத்து நிற்கின்றனர்.

5. நமது தர்மத்திற்கு ஆரம்பகாலம் எது ?

நமது தர்மம் வேதத்தை ஆசிரயித்தது. வேதமோ ஒவ்வொரு ஸ்ருஷ்டிகாலத்தும் ஈசுவரனுடைய அநுக்ரஹத்தினல் ப்ரஹ்மாவின் மூலமாக உலகங்களுடன் கூடவேதோன்றி ஒவ்வொரு பிரளயகாலத்திலும் ஈசனிடம் அவற்றுடனே கூடவே ஒடுங்கும். ஆதலின் வேதமும் அதைச்சார்ந்த நமது தர்மமும் அநாதியாயுள்ளது. சாசுவதமானது.

6. ஈசுவரன் எதற்காக உலகங்களுடன் வேதத்தைப் பிரகாசிக்கச் செய்திருக்கிறுர் ?

உலகத்தில் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிராணிகளிடத்தில் ஈசுவரன் பூர்ணப்பிரியமும் கருணையுமுடையவராதலால் இப்பிராணிகள் கெட்டவழியில் சென்று கஷ்டங்களுக்குப் பாத்திரமாகாவண்ணம் அவர்கள் எங்ஙனம் ஒரு ஜன்மத்தில் மாத்திரமல்லாது எல்லா ஜன்மங்களிலும் க்ஷேமத்தையும் கடைசியாக ஈசுவரஸ்வரூபமான மோக்ஷத்தையுமடைவார்களோ அவ்விதம் அதற்குவேண்டிய வழியாக தர்மத்தை வேதமூலமாய் உபதேசித்தருளியிருக்கிறுர். நமது புத்தியுக்தியோ ஒரு ஜன்மத்தில் ஸம்பாதிக்கவேண்டிய ஸௌக்யத்தைக்கூட எவ்வளவு யத்தனித்தும் ஸம்பாதிக்க சக்தியற்று கஷ்டப்படுகிறது. எல்லா மறிந்த ஈசுவரனுடைய சட்டமான தர்மத்தைவிட்டு ஒவ்வொரு நாள் ஒவ்வொருவிதம் தோன்றுவதும் அற்பங்கூட அறியாததுமான சொந்த யுக்திப்படி தோன்றியவாறு நாம் நடக்கத்தலைப்பட்டு நாம் இப்பொழுது அனுபவித்துவரும் கஷ்டங்களோடு இன்னும் நரகமென்னும் மகாகஷ்டங்கள் நம்மை யணுகாவண்ணம் ஈசுவரன் நமக்கு மகரிஷிகள் மூலமாய் வேதங்களையும் அதன் மூலமாய் நாம் மோக்ஷத்தையடையும் தர்மங்களையும் அநுக்ரஹித்திருக்கிறுர்.

7. தர்மம் பொதுவாய் எத்தனை வகைப்படும் ?

ஸாமான்யதர்மம், விசேஷதர்மம் என இருவகைப்படும்.

8. ஸாமான்ய தர்மம் என்றால் என்ன ?

மானிடப்பிறவியை அடைந்தவர்கள் எல்லோரும் பொதுவாய் அனுஷ்டிக்கத்தக்க தர்மங்களுக்கு ஸாமான்ய தர்மங்கள் என்று பெயர். அஹிம்ஸை, ஸத்யம், திருடாமை, சரீரசுத்தி, இந்திரியநிக்ரஹம் இவை ஐந்தும் பிரதானமான ஸாமான்ய தர்மங்கள். இவற்றுள் துரோகமின்மை, துன்மார்க்கமின்மை, கோபமின்மை, கபடமின்மை, பகிர்ந்துகொடுத்தல், பூததயை ஈசுவரபக்தி, நன்றியறிதல் முதலியவையுமடங்கும்.

9. விசேஷதர்மம் என்றால் என்ன ?

ஒவ்வொரு வர்ணங்களில் பிறந்தவர்களும் தத்தம் வர்ணங்களுக்கு விதித்தவாறு அனுஷ்டிக்கவேண்டிய சிறப்பு தர்மங்களுக்கு விசேஷதர்மங்களென்று பெயர்.

10. வர்ணங்கள் எத்தனை விதம் ?

ப்ரஹ்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வர்ணங்களென நால் வகைப்படும். ஈசுவரன் மானிடர்களை ஸ்ருஷ்டிக்கும்போது அந்தந்த ஜீவராசிகளின் பூர்வவாஸனுபக்குவத்தை அனுஸரித்து அவரவர்களுக்கு க்ஷேமகரமான தர்மத்தை யனுஷ்டிக்கும்படிக்கே நான்கு வர்ணங்களாக ஸ்ருஷ்டித்தார். மேலும் ப்ரஹ்மா தனது முகம், புஜங்கள், தொடைகள், பாதங்களினின்றும் மேற்கூறிய நான்கு வர்ணங்களையும் படைத்ததாக வேதங்கூறியது. அத்தியயனத்தினுல் வேதஸம்ரக்ஷணைக்கு முகசக்தியும் யுத்த சக்தியினுல் பூமியை யடைக்கியாள பாகுபலமும், ஸஞ்சரித்து வியாபாரம் செய்யத் தொடைபலமும் மற்ற மூன்றையும் வகித்துத்தாங்க பாதசக்தியும் அவசியம் யென்னும் கருத்தினுற் போலும்.

வர்ணங்களில் ஒவ்வொருவரும் பிறர் தர்மத்தைக் கைக்கொள்ளாது தத்தம் கட்டளைகளை மாத்திரம் வழுவாது நடத்திவரின் எல்லோரும் ஈசனது அனுக்ரஹத்திற்கு ஸமமான பாத்திரர்களாகின்றனர். (இன்னும் வரும்.)

தர்மம்.

(கஎஉ-வது பக்கத்தொடர்ச்சி).

பாருங்கள். கீதையில் 1வது அத்தியாயத்தில் அர்ஜுனன் வருத்தப்படும்போது,

कुलक्षये प्रणश्यन्ति कुलधर्मास्सनातनाः ।
धर्मे नष्टे कुलं कृत्स्नमधर्मोऽभिभवत्युत ॥
अधर्माभिभवात् कृष्ण प्रदुष्यन्ति कुलस्त्रियः ।
स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसंकरः ॥
संकरो नरकायैव कुलघ्नानां कुलस्य च ।
अहो बत महात्पापं कर्तुं व्यवसिता वयम् ॥

நாம் நம்முடைய குலத்தவர்களை யெல்லாம் நாசம் செய்யும் போது அனாதிகாலமாயிருக்கிற நமது குலதர்மமெல்லாம் கெட்டுப்போம். தர்மம்கெட்டால் குலம் முழுமையும் அதர்மம் வியாபித்துவிடும். அதர்மத்தின் வியாபகத்தினால் கிருஷ்ணா! குலஸ்திரீகள் கெட்டுப்போவார்கள். ஸ்திரீகள்கெட்டால் கிருஷ்ணா வருணங்கள் கலந்துவிடும். ஜாதிகள் ஒன்றுசேர்ந்தால் அப்படிச் செய்தவர்களும் அக்குலமும் நரகத்தைத்தான் அடையும். ஐயோ கஷ்டம் பெரியபாபத்தைச்செய்ய நாம்முயற்சிசெய்து விட்டோம். என்று கதறினான். பாருங்கள் ஒரு மூலமான குலதர்மம் கெட்டுப்போனால் எவ்வளவு அனர்த்தம். ஜாதி கெட்டால் எவ்வளவு கெடுதல், ஸ்திரீகள் கெட்டால் எவ்வளவு நஷ்டம். அப்படிக் குலதர்மம் கெடக்காரணம் என்னவென்றால் இங்கு நிற்கும் வீரர்களைக் கொன்றுவிட்டால் அந்தந்த ஸ்திரீகளுக்கு ஸனாதனமான குலதர்மம் தெரியாது, அதை எடுத்துரைக்க மனுஷ்யாள் இல்லாததால்தான் என்று வருத்தப்பட்டான். நம் இந்தியாவை இதுபரியந்தம் காப்பாற்றியது ஸ்திரீ

தர்மம்தான். மற்ற தேசத்தில் இவ்விதம் ஸ்திரீ தர்மம் இன்று மில்லை முன்னுமில்லை பின்னும் வரப்போகிறதுமில்லை யென்பது யாவருமறிந்த விஷயமே. இப்போது நமது தேசத்திலும் மேற்றிசையார் நாகரீகத்தையும் நம் குலஸ்திரீகளும் கையாள ஆரம்பித்துவிட்டார்கள். அப்படிச் செய்யும்படி இப்போதிய மகாத்மாக்களும் உபதேசிக்கிறார்கள். இதனாலிவர்கள் நினைக்கும் பலன் கைகூடலாம். இவர்கள் நினைப்பது என்னவென்றால் மேற்றிசையார்போல் நாமுமாகவேண்டுமென்பதே. அதுபோல் நாம் ஆய்விடலாம். இதைப்பற்றி விரித்துச் சொல்வது இங்கு நியாயமில்லை. சென்ற வருடத்திலேயே இப்பத்திரிகையில் ஸ்திரீ தர்மம் என்று விரிவாய்ச் சொல்லிவிட்டேன். ஆதல் பற்றி இதை அங்கு கண்டுகொள்க. இவ்வபிப்பிராயங்களை மனதில் வைத்து ஓர் மகான் நமது விவாகவிதியைப்பற்றி எழுதவாரம்பித்தபோது,

स्त्रीमूल स्सर्वधर्मो भवति सुविदित स्ताश्च हित्वा विवाहं
न ग्राह्याः शास्त्रदृष्ट्या स च विधिविहितोऽपेक्षते कालमेकम् ।
निर्णेतव्यश्च सोऽयं श्रुतितदनुगुणस्मृत्यभिप्रायदृष्ट्या
नोचेद्धर्मस्तदर्था श्रुतिरखिलमिदं क्षीयते मूलदोषात् ॥

எல்லா தர்மங்களும் ஸ்திரீயை மூலமாகக்கொண்டதென்பது யாவருக்கும் வெளிப்படை. அத்தகைய ஸ்திரீகளும் விவாக ஸம்ஸ்காரமில்லாமல் சேர்க்கத்தக்கவர்களல்ல. அவ்விவாகமும் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட ஒரு முக்யமானகாலத்தை எதிர்பார்க்கிறது. அக்காலந்தான் இன்னதென்று சுருதி ஸ்மிருதிக்கு ஒத்த பெரியோர்களது அபிப்பிராயத்தால் நிச்சயம் செய்யப்படவேண்டும். அப்படி நிச்சயம் செய்யாவிட்டால் தர்மம் அதற்கேற்பட்ட சுருதி முதலியயாவும் ஆதாரமில்லாமலழிந்துவிடும் என்றார். ஆனதால் எவ்விதத்திலும் சாஸ்திரவிதியான தர்மத்தைத்தான் நாம் அனுஷ்டிக்கவேண்டும், அப்படிச் செய்தால் நாம் கெடமாட்டோம்.

ஆதல்பற்றியே தர்மபுத்திரர் ஏதோ ஒருவிதமான தர்மத்திற்குக் கட்டுப்பட்டு துரௌபதியின் வஸ்திராபகாரத்திலும் காலத்தை உத்தேசித்துப் பேசாமலிருந்தார். மகாபலசாலிகளான தம்பிகளும் அண்ணன் ஆக்ஞைக்கு கீழ்ப்படியவேண்டுமென்ற தர்மத்தினுல் அவரது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். பிறகு பிச்சைக்காரர்களைப்போல் காட்டுக்குஞ் சென்றார்கள். அங்கு சென்றதும் துரௌபதி வருத்தம் பொறுக்கமுடியாமல் தர்மபுத்திரரைப் பார்த்துப் பலவிதமாய்ப் பேசி இதெல்லாம் என்ன தர்மம்? தர்மம் தர்மமென்று பார்க்கப் போய்த்தான் நமக்கு இவ்வளவு அனர்த்தம்நேர்ந்தது. அதெல்லாம் பாராத அவர்கள் நாளுக்குநாள் சுகமாய் வாழ்கிறார்கள் என்று கேட்டதற்கு தர்ம்புத்திரர்,

अधर्मेणैजते तावत् ततो भद्राणि पश्यति ।
तत स्सपत्नाञ्जयति मूलतस्तु विनश्यति ॥

அதர்மத்தினுல் ரொம்பரொம்ப க்ஷேமமடைகிறான். பிறகு மங்களங்களையும் பார்க்கிறான். பிறகு சத்துருக்களையும் ஜயிக்கிறான். ஆனுல் கடைசியில் அடியோடழிந்துவிடுவான் என்றார். அம்மாதிரி துர்யோதனுதிகள் அக்கிரமம் செய்தது கணக்குண்டா? முதலில் அவர்களடைந்த க்ஷேமத்திற்கும் ஐசுவரியத்திற்கும் குறைவுண்டோ? தர்மத்தையே யெதிர்பார்த்து நின்ற தர்மபுத்திராதிகள் முதலில் அடைந்த கஷ்டத்திற்குத்தான் அளவுண்டோ? கடைசியில் யார் க்ஷேமத்தைப் பூரணமாயடைந்தது? யார் கெட்டது? என்பதை நீங்களே தெரிந்துகொள்வீர். ஏன் அவ்விதம்நேர்ந்தது? அதற்குக் காரணமென்னவென்பதைமட்டும் கவனித்துப்பார்த்தால் தர்மம் தலைகாக்கும், அதர்மம் அழித்துவிடும் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். இவ்வபிப்பிராயத்தை அனுஸரித்தே மனு,

नाधर्मश्चारितोलोके कर्तुर्भवति निष्फलः ।

शनै रावर्त्यमान स्तु कर्तुर्मूलानि कृन्तति ॥
यदि नात्मनि पुत्रेषु न चेत्पुत्रेषु नप्तृषु ।
नत्वेवतु कृतोऽधर्मः कर्तुर्भवति निष्फलः ॥

உலகில் ஒருவன் அதர்மம்செய்தால் அது அவனுக்குப் பலனைக் கொடாமல் வீண்போகாது. மெள்ளமெள்ளச் செய்யப்பட்டு அவனுடைய மூலத்தையே அறுத்துவிடும். அத்தகைய அதர்மம் செய்தவனிடம் பலிக்காமற்போனுல் அவனது பிள்ளைகளிடத்திற் பலிக்கும். அங்குமில்லாவிடில் பேரன்களுக்குவரும். ஆகவே செய்யப்பட்ட அதர்மம் கர்த்தாவுக்குப் பலனைக்கொடாமல் வீண்போகவேபோகாது என்முர். இங்கு கவனிக்க வேண்டியது கொஞ்சம் உண்டு. அதாவது, அதர்மம் செய்தவன் அதன்பலனை அனுபவிக்காமல் இறந்துவிட்டால் அவனது பிள்ளைகளைப் பிடிக்கும், அங்குமில்லாவிடில் பேரன்களைப் பிடிக்கும் என்முர். இதனுல் आत्मा वै पुत्रनामाऽसि தானே புத்திரனுகப் பிறக்கிருன். பேரனும் அவன்தான் என்ற சுருதி நியாயத்தை இங்கு காண்பித்தார். அதர்மம் செய்தமனிதன் அந்த சரீரத்திலேயே அதை அனுபவிக்காமல்விட்டால் அடுத்த சரீரத்தில் அனுபவிப்பவன் அவன்தானென்பது உண்மை. ஆனது பற்றியே தகப்பன்பட்ட கடனுக்குப் பிள்ளை பாத்தியப்படுகிருன். ஆனுல் தகப்பன்செய்த குற்றத்திற்கு அரசன் பிள்ளையைத் தண்டிக்கலாமாவென்முல் அப்படியும்செய்யலாம் ஆனுல் ராஜதண்டனையானது உடனே ஏற்படுமானதால் தகப்பன் சரீரம் இருந்தால் உடனே அதில்தான் பிரவேசிக்கும். கடன் முதலிய விஷயத்தில் பிள்ளைக்கும் பாதகம் ஏற்படும். மற்றும் தகப்பன் அதர்மம் செய்தபோதிலும் அதனுலுண்டாகும் தண்டனையை அந்த தேகத்தில் பிரவேசிக்காமலிருக்கும்படியான மிக பலமான நல்ல கன்மமிருந்தால் அது இதை வரவொட்டாமல் தடுத்துவிடும். பிறகு அந்த பலமானகன்மா குறைந்தபிறகு தான் இது கிளம்பும். வீணுய்மட்டிலும் போய்விடாது. இவ்

வபிப்பிராயத்தை பகவத்பாதரவர்கள்

पूर्वाभ्यासेन तेनैव ह्रियते ह्यवशोऽपि सः

என்கிற சுலோகத்தில் யோகாப்பியாஸத்தால் ஏற்பட்ட ஸம்ஸ்காரத்தைக்காட்டிலும்பெரிதாக அதர்மம்முதலியவை செய்யப்படாமலிருந்தால் அப்போது யோகாப்பியாஸத்தாலேற்பட்ட ஸம்ஸ்காரத்தால் கவரப்படுகிருன். அதர்மம் மிகபலமாய் இருந்தால் அப்போது யோகத்தினுல் சம்பாதிக்கப்பட்ட ஸம்ஸ்காரமும் பின்தள்ளப்பட்டுவிடும். அவ்வதர்மம் அனுபவித்துக்குறைந்தபிறகு யோகஸம்ஸ்காரம் தானே கார்யத்தை ஆரம்பிக்கும். ஆனுல் எவ்வளவுகாலமானுலும் வீணுய்ப் பலன்கொடாமல்அழிந்துபோகாது என்ருர்கள். ஆகவே அதர்மம்செய்த மனுஷ்யன் அப்பலனேஅப்போதே அனுபவிக்கமுடியாமல் முன்ஸம்ஸ்காரம் தடைசெய்துகொண்டிருக்கலாம். அப்படித் தடைசெய்தால் பிறருவம்சத்திலிறங்குமென்று மனு அபிப்பிராயம். ஆனுல் அதர்மம் ஒருவன்செய்தால் மறுஜன்மத்தில் அவன் அனுபவிக்காமல் அவன் புத்திரக்கிரமத்தில்தான் இறங்குமோவென்று சங்கையொன்றுநிகழலாம். அதுசரியன்று. ஒருவன்செய்த பாபபுண்யத்திற்கு அவன்தான் பலனையனுபவிப்பான். அது ஒருபோதும் அவனை விடாதென்பது இந்த சுலோகத்தின் பாஷ்யவாக்கியத்தின் கருத்தினுல் வெளிபாகிறது. ஆனுல் மூலபுருஷன் செய்த தர்மாதர்மத்திற்குக்கிடைத்த பொருள் முதலியன பூமியிலிருந்தால் அத்தகையபொருளை யனுபவிக்க அதற்குத்தகுந்த கன்மமுள்ளவன்தான் இவனுக்குப் புத்ரனுய்ப்பிறப்பான். அப்பொருளால் அவன்பிதுருக்களுடைய சடங்குகளைச்செய்வான். பிறகு பாபமிகுதியால் அப்பொருளழிந்துவிடலாம். அதினின்றுமவன் ஸந்ததி மிக கஷ்டத்திற்காளாகும். அதன்மூலம் பிதுருக்களுக்கும் பிண்டம் முதலியனவில்லாமல் நரகத்தில்மூழ்கி வெளியேற முடியாமற் தவிப்பானென்பதுதான் அபிப்பிராயம். இதைப் பற்றி இங்கு விவரிப்பது தகுதியன்று. இறந்தவனின் கதி

என்று ஒருவிஷயம் எடுத்துக்கொண்டு அதில் விசாரிப்பாம். ஆகவே சாஸ்திரோக்த தர்மாதர்மத்தை நன்கறிந்து செய்தால் தான் அது பலனைக்கொடுக்குமே தவிர நம் யுக்திக்குத்தகுந்த தர்மமெல்லாம் ஒருபோதும் தர்மமாகாதென்பதுதான் சாஸ்திரங்களின் கூற்று.

(இன்னும் வரும்.)

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

ஸ்ரீ ராமவிஜயம்.

(கஎகூ-வது பக்கத்தொடர்ச்சி.)

ஸ்ரீ ராமனுடைய மனம் சீதாதேவியை நாடிச்சென்றது. "நாம் இக்கரையிலும் தேவி அக்கரையிலுமாக இருக்கின்றோம். இந்த மகாபயங்கரமான கருங்கடலோ நமது மனோரதத்திற்கும் நமக்கும் குறுக்காய்நிற்பது. லக்ஷ்மணா! இந்தக்காற்றைப் பூஜிக்கவேணுமடா? தேவியின் அங்கங்களில் பட்டுவிட்டு சாகர ஜலத்தில் குளிரக்குளிரத் தவழ்ந்துவந்து இது நம்மை ஆநந்திப்பிக்கவில்லையா? இந்தச் சந்திரன் நமக்குப் பரமோபகாரியடா. தேவியின் கண்கள் சந்திரனைப்பார்க்கும், நானும் சந்திரனைப் பார்க்கின்றேன். எங்களிருவர் கண்களையும் இஷ்டனான சந்திரன் தன்னிடத்தில் சேர்த்துப் பார்க்கின்றான். ஜனகன் செல்வமான என் கண்மணி ராக்ஷஸர்கள் நடுவில் அகப்பட்டுத் தவிக்கின்றாள். இந்த ராக்ஷஸர்கள் என்ற மேகக்கூட்டத்தைப் பிளந்து சந்திரகலையை மீட்பதுபோல் தேவியை நாம் மீட்டுவர வேண்டுமடா. தீக்ஷணமான பாணங்களால் ராவணன் மார்பை பேதித்து என் பிராணசகியான சீதையின் துயரைத் தீர்த்த பிறகுதான் என்புத்தி எனக்குச்சரியாகுமடா" என்றிவ்வாறெல்லாம் ராமன் உரைத்தார். லக்ஷ்மணன், "அண்ணா! கவலைவேண்டாம், ஜயகாலம் வந்துவிட்டது. மங்களங்களை நமக்கு நிச்சய

மாய்ச் சேர்ப்பிக்கக்கூடிய நிமித்தங்களைக் காண்கின்றேன். தேவியுடன் சேர்ந்துவிட்டதாகவே நினைத்துத் தாங்கள் சந்தோஷிக்கலாம். ஒரு ஹநுமானுக்கு வழிசொல்லமுடியாத இந்தராவணன் நமக்கு எந்தமூலை? தங்கள் அமோகமான பாணங்களுக்கு இது என்னவேலை? லீலையாகவே போர்புரிந்து ஜயஸ்ரீயுடன் சீதாசமேதனாக விளங்கும் தங்கள் திவ்யமங்கள விக்ரஹத்தை இப்பொழுதே நான் கண்கள்குளிரப் பார்க்கப்போகின்றேன்" என்று ஸ்ரீ ராமனை சமாதானம் செய்தார்.

ப. கி. கல்யாணராம சாஸ்திரிகள்.

நன்றிமறவாமை.

நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றேமறப்பது நன்று.

என்று திருக்குறளில், தனக்கு ஒருவன் முன்செய்த நன்மையை மறந்துவிடுவது அறமன்று, அவன்செய்த தீமையைச் செய்தபொழுதே மறந்துவிடுவது அறமாமென்று திருவள்ளுவநாயனாராற் சொல்லப்பட்டமையால், தாய், தந்தை, குரு, தெய்வம், அரசன், பெரியோர்செய்த நன்றியை எந்நாளும் மறவாமற் சிந்தித்து ஒழுகல்வேண்டும்.

இக்குறளின் கருத்தையே அப்பாவாஜபேயர் அவர்கள் வடமொழியில் இங்ஙனம் கூறுகிறார்.

परोपकार विस्मृतिर्नयुज्यते मनागपि ।
अपक्रियातु तत्कृता तदैव विस्मृतावरा ॥

தாய்தந்தை நன்றி.

தாயானவள் பத்துமாதம் கர்ப்பத்திற்சுமந்து வருந்திப் பெற்று, மார்பிலும் தோளிலும் வயிற்றிலும் வைத்தணைத்து,

பாலூட்டி, தாலாட்டிச் சீராட்டிப்போஷித்து, நோயணுகாது மருந்தளித்துப் பத்தியமிருந்து, அபாயம் வாராமற்காத்து, நாளொருமேனியும், பொழுதொருவண்ணமுமாகப் பிள்ளையை வளர்த்துவருகிறாள்.

தந்தையானவன் பசியாமல் ஊணும் உடையுந்தந்து, துஷ்டசகவாசஞ் செய்யவாவது, ஓடியொளிந்து மூர்க்கனுப்த்திரியவாவது, தன்னிச்சையாய் விடாமல் அடக்கி, ஐந்துவயதிலே கல்விக்கழகத்தில் விடுத்துப் பூரணபண்டிதனாகக் கல்விபயிற்றுவித்து, சபையோரெல்லாம் பூஜ்யதை பண்ணத்தக்க யோக்கியனாகும்படி செய்கிறான்.

"அன்னையும்பிதாவும் முன்னறிதெய்வம்" "தந்தைதாய்ப் பேண்" என்பதனாலும், அவர்களை இகழாமல் தெய்வமாக எண்ணிவணங்கி, அவர்களுக்குக் கீழமைந்து, அவர்களைப் போஷிக்கவேண்டும். பெற்றவர்களுக்குப் புத்திரனன்றிப் போஷகன் வேறே யாவர்.

மாதிரு பிதுரு கைங்கரியம் தனக்கு லபிக்கவேண்டும் என்று தான் கடவுளைப்பிரார்த்தித்து எதிர்பார்த்திருந்து, அவர்கள் தேகவியோகமானவுடனே அவர்களுக்குப் பிரேத சம்ஸ்காரம் முதலாகிய கடன்களெல்லாம் லோபமில்லாமல் சிரத்தையுடனே நடத்தவேண்டும். சர்வசங்க பரித்யாகஞ்செய்த ஸ்ரீசங்கரபகவத்பாதர்களும், தாயின் அந்திமதசையில்வந்து, உத்தம லோகஞ் சேர்ப்பித்து, தாய்க்கடன்களைக் கழித்தனரன்றோ.

முற்றத்துறந்த பட்டினத்தார், தாய் இறக்குமளவுங் காத்திருந்து, அவள் மரித்தபின்பு, வாழைமரங்களைக் காஷ்டமாக அடுக்கி, அதன்மேல் அவளைக்கிடத்தி வாய்க்கரிசியிட்டு

முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையில்
அன்னையிட்டதீ யடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே.

என்று சொல்லிக் கொள்ளிவைத்துக் குடமுடைத்துப் பால்

தெளித்து உத்தரக்கிரியைகளும் செய்துமுடித்துச் சென்றா ரன்றோ.

மேலும், தன்னைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியி லும் அதிக மகிழ்ச்சியைப் பெற்றதாய் அடைய, 'உன் மகன் சகல கலைவல்லவன், சாதுரியகுண சம்பன்னன்' என்று அறி வுடையோர் சொல்லும்படி அவள் செவியிற் கேள்விப்படச் செய்யவும் வேண்டும்.

ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக்கேட்ட தாய்.

समस्तशास्त्रवल्लभः सुतस्तवेति सन्मुखात् ।
निशम्यपुत्रलाभतः परं प्रसूः सुखं भजेत् ॥

என்று, இத்தென்மொழி வடமொழி வசனங்களும், தெரிவிக் கின்றன.

குருசெய்நன்றி.

குருவானவர் ஆமை தான் இட்டமுட்டைகளை இடை விடாது நினைப்பதுபோலச் சீஷனுக்குப் பரிபாகமுண்டாக வேண்டுமென்று தமது திருவுளத்தில் நினைத்தும், மீன் தன் சினையை நோக்குவதுபோலச் சீஷனது அஞ்ஞானம் நீங்க அவ னிடத்தில் கிருபாநோக்கம் வைத்தும், பறவை தான் ஈன்ற அண்டத்தைச் சிறகினால் அணைப்பதுபோலத் தேகபந்தமொழி யக் கரத்தினால் அவனைப் பரிசித்தும், தமது சந்நிதானத்தில் இருக்கச்செய்து அவன் முகத்தை நோக்கி தத்துவங்களைப் போதிப்பார்.

குருவைச் சாமான்னியமாக நினையாமல், மானிடவுருவங் கொண்டுவந்த கடவுளாகப் பாவித்து, அவர் வாக்கிலிருந்து வரும் மந்திரத்தைக் கேவலம் மனிதர் வாய்ச்சொல்லாக மதி யாமல், கடவுளது திருவாக்கிலிருந்து தொன்றுதொட்டுப் பரம் பரையாய்வந்த பரமார்த்தமென்று உண்மையாக மதிக்க வேண்டும்.

எங்குங் குருவில்லாத வித்தையில்லையாதலால், எப்பொழுதுங் குருவைத் தொடர்ந்து ஆசிரயிக்கவேண்டுமல்லவோ? குருபாதமே கதியென்று கங்கைப் பிரவாஹத்தில், உறுதியாய் நடந்துவந்த காலத்தில், கங்காதேவி பாதங்களில் பத்மங்களை போட்டுக் கரைசேர்த்து. பத்மபாதனென்ற திருநாமாவை, ஸனந்தர் பெறும்படிசெய்த வரலாற்றை யாம்கேட்டதில்லையா?

கடவுள் செய்நன்றி.

கடவுளானவர், பரமாத்மாவாகிய தமக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள தாரதம்மியம் இவ்வகைப்பட்டதென்று வேதாகமங்களின் மூலமாகவிளக்கி, அடைதற்கரிய அசாத்தியமாய் ஒப்பற்ற பெரிய வீட்டின்பத்தை அடைவதற்குச் சாதனமான, மானிடப்பிறவியைத் தந்தருளியதற்கு, யாம் அவரை எப்பொழுதும் மறவாது தியானிக்கவேண்டும்.

மெய்யறிவை யுடையவனது நல்லவடிகளை வணங்காராயின், யாவங்கற்ற கல்வியறிவினல் உண்டாகிய பயன் யாது?

கற்றதனுலாயபயனென் கொல்வாலறிவ
நற்றூடொழா அறெனின்.

என்றார் திருவள்ளுவரும்.

समस्तशास्त्रचिन्तनैरहर्निशं च किं फलम् ।
महेशपादवन्दनं हृदापि नातनोतिचेत् ॥

என்று வடமொழியிலும் அப்பாவாஜபேயர் கூறுகிறார்.

தெய்வபக்தியில்லாதவர்கள் கங்காஸ்நானஞ் செய்தாலும், வனவாசம் பண்ணினலும், மலைக்குகைக்குள்ளே கண்ணைத்திறவாமல் யோகத்திலிருந்தாலும் முக்தியடைய மாட்டார்கள். ஆமை மீன் தவளை முதலானவைகள் கங்காநதியில் உற்பவித்து அக்கங்கைக்குள்ளே தானே மூழ்கியிருந்தும், யானை புலி கரடி முதலியவைகள் காட்டில் உற்பத்தியாகி அக்காட்டினிடத்திலேயே வாசம் செய்தும், பசுற்குருடாகிய கோட்டான் மரப்

பொந்துக்குள் தானே கண்ணை மூடிக்கொண்டிருந்தும் என்ன பிரயோஜனம்.

கடவுள் பாதங்களைச் சேர்ந்தவர்கள் பிறவிக்கடலைக் கடப்பார்கள். சேராதவர்கள் பிறவிக்கடலைக் கடக்கமாட்டார்கள்.

பிறவிப்பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேராதார்.

महेशपादपोतकावलम्बिनो नराश्च ये ।
तरन्ति ते भवांबुधिं कदापि नेतरे जनाः ॥

என்று சான்றோர்களும் மொழிகின்றனர்.

ஆகையால், ஞானத்திற்குரிய மானிடஜன்மத்தைத் தந்தருளிய கடவுளிடம் வழிபட்டு, அவருடை திருவடிகளைத் தியானித்து, பக்திமார்க்கத்தை யவலம்பிக்கவேண்டும்.

அரசன் செய்நன்றி.

அரசனானவன், மன்னுயிர் யாவையும் தன்னுயிர்போலக் கருதி, குடிகளுக்கு க்ஷேமமுண்டாகும்படி முறைதவறாது செங்கோல் செலுத்தி, தயையாய்ப் பரிபாலனஞ் செய்கின்றவன்.

துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்கிற அரசனில்லாத நாடு தன்னரசுநாடாய் உபத்திரவத்திற்கே உறைவிடமாகும்.

அரசனில்லாவிடில் களவுமுதலான துன்பங்கள் நேரிடும். இந்த சொத்து இன்னாருடையது என்று நியமமில்லாமல் பலமுள்ளவருக்கே கைவசமாகும். வர்ணாசிரம முறைகளும் ஸரிவர நடவாமல் உலகத்திற்கே கேடுநேரிடும்.

திலீபன் என்ற சூரியவம்சத்தரசன், முறைதவறாமல் ராஜ்யபரிபாலனஞ் செய்யுங்கால், மற்ற அரசர்கள் அவருடைய கீர்த்தியைப் பின்பற்ற முடியாதவர்களானார்கள். ஏனெனில் அவனுளுகையில் திருட்டுத்தனம் என்ற மொழியானது பொருளில்லாமல், சப்தமாத்திரமாகத்தானிருந்தது என்று காளிதாஸர் வர்ணித்துள்ளார்.

न किलानुययुस्तस्य राजानो रक्षितुर्यशः ।
व्यावृत्ता यत्परस्वेभ्यः श्रुतौ तस्करतास्थिता ॥

என்று, இதற்கு மற்றுமொருவர் இவ்வாறு உரை எழுதலானர்.

திருட்டுத்தனமானது, பிறர் பொருளிலிருந்து திரும்பிக்கொண்டு, அந்த வார்த்தையைத் தானே, திருடிக்கொண்டு போய்விட்டது என்று. திருட்டு என்ற வார்த்தையே, அவர் அரசுபுரியும்போது தோன்றவில்லை என்பது பொருளாகிறது.

யாரைப்பகைத்தாலும் அரசனைமாத்திரம்பகைக்கலாகாது. அரசன் திக்பாலகர்களின் அம்சங்களால் சிருஷ்டிக்கப்பட்டவன். ஆகையால், அரசனிடம் நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

பெரியோர் செய்நன்றி.

பெரியோர்கள் ஜீவகாருண்யத்தால் யாம் பெற்றபேறு வையகம்பெறுக என்று எண்ணி, சகலரும் விதிவிலக்குகளை அறிந்து நெறிவழாதொழுகி, இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் அடையும்பொருட்டு லோகோபகாரமாக சகல தர்மங்களையும், ஆசார வியவகாரப் பிராயச்சித்தம் என மூன்று வகையாகச் சாஸ்திரமுகத்தால், உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கி அனுக்கிரகித்ததனல், அந்த ஆப்தவசனத்தைமறவாது சிந்திக்கவேண்டும்.

மேற்கூறிய ஆசாரதர்மமாவது யாவரும் தங்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட நிலைகளிலேநின்று, அவைகளைக் குறித்துச் சொல்லிய தர்மங்களில் வழுவாது நடத்தல்; வியவகாரதர்மமாவது, ஒரு பொருளையே ஒருவன் எனதென்றும் மற்றெருவன் தனதென்றும் சுதந்தரித்து அந்தப் பொருளின்மேல் வழக்குத் தொடுத்தல்; பிராயச்சித்த தர்மமாவது, மேற்குறித்துச்சொல்லிய ஆசாரவழியிலும் வியவகாரவழியிலும் பிசகிநடந்தவர்களை அவ்வழியிலே தவறாது நிலைக்கச்செய்யும்படி, பகைவர் சிநேகர் என்னும் பட்சபாதமில்லாமல் பொதுப்பட ஆராய்ந்து அதற்கேற்பத் தண்டித்தலாம். (இன்னும் வரும்.)

கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரி.